Kanchipuram Dt

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி பகுதி – அ மதிப்பெண்கள் : 90

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 x 1 = 20

1. நிலை அறிக்கை ஒரு
அ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை ஆ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
இ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு ஈ) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு

2. கடன் விற்பனை தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
அ) மொத்த கடனாளிகள் கணக்கு ஆ) மொத்த கடனீந்தோர் கணக்கு
இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு

3. தொடக்க முதல் ₹10,000, அவ்வாண்டின் எடுப்புகள் ₹6,000, அவ்வாண்டின் இலாபம் ₹2,000 மற்றும் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹3,000 எனில், இறுதி முதல் காணவும்.
அ) ₹9,000 ஆ) ₹11,000 இ) ₹21,000 ஈ) ₹3,000

4. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு
அ) பெயரளவு க/கு ஆ) சொத்து க/கு
இ) ஆள்சார் க/கு ஈ) பிரதிநிதித்துவ ஆள்சார் க/கு

5. உயில் கொடை ஒரு
அ) வருவாயின செலவு ஆ) முதலின செலவு
இ) வருவாயின வரவு ஈ) முதலின வரவு

6. ஒரு மன்றத்தில் உள்ள 500 உறுப்பினர்கள், ஆண்டு சந்தா ₹100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ₹200, முன்கூட்டி பெற்ற சந்தா ₹300, வருவாய் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினைக் கண்டறியவும்
அ) ₹50,000 ஆ) ₹50,200 இ) ₹49,900 ஈ) ₹49,800

7. பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?
அ) எடுப்பு மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்க வேண்டும்
ஆ) முதல் மீது வட்டி - முதல் கணக்கில் வ்ரவு வைக்க வேண்டும்
இ) கடன் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்க வேண்டும்
ஈ) இலாபப் பகிர்வு - முதல் கணக்கில் வரவு வைக்க வேண்டும்

8. கூட்டாண்மை நிறுவனத்தில் நிலை முதல் முறை பின்பற்றப்படும் போது பின்வருவனவற்றுள் எது முதல் கணக்கில் காட்டப்படும்?
அ) கூடுதல் முதல் கொண்டு வந்தது ஆ) முதல் மீது வட்டி
இ) எடுப்புகள் மீது வட்டி ஈ) இலாபப் பகிர்வு

9. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது முதல் மீது வட்டி
அ) வழங்கப்படுவதில்லை ஆ) வங்கி விதத்தில் வழங்கப்படும்
இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும் ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

10. கூட்டாளி சேர்ப்பு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானது அல்ல?
அ) பொதுவாக கூட்டாளிகளின் பரஸ்பர உரிமை மாறும்
ஆ) முந்தைய ஆண்டுகளின் இலாபம் மற்றும் நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்
இ) கூட்டாண்மை நிறுவனமானது புதிய ஒப்பந்தத்தின் கீழ் மறு கட்டமைக்கப்படும்
ஈ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. சராசரி இலாபம் ₹25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹15,000 ஆக இருக்கும்போது உயர் இலாபம்
அ) ₹25,000 ஆ) ₹5,000 இ) ₹10,000 ஈ) ₹15,000

12. கீழ்வருவனவற்றுள் எது சரியானது?
அ) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்
ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகள்

13. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
இ) நற்பெயர் ஒரு கற்பனை சொத்து ஈ) நற்பெயரினை வாங்க முடியாது

14. சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்யும்போது ஏற்படும் இலாபம் மற்றும் நட்டம் யாருடைய முதல் கணக்கிற்கு மாற்றப்படுகிறது?
அ) பழைய கூட்டாளிகள் ஆ) புதிய கூட்டாளி
இ) அனைத்து கூட்டாளிகள் ஈ) தியாகம் செய்த கூட்டாளிகள்

15. கூட்டாளியின் புதிய இலாபப் பகிர்வினை விட பழைய இலாபப் பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது
அ) முதல் விகிதம் ஆ) தியாக விகிதம் இ) ஆதாய விகிதம் ஈ) இவற்றுள் எதுவுமில்லை

16. கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின் போது பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது.
அ) புதிய இலாபப் பகிர்வு விகிதம் ஆ) பழைய இலாபப் பகிர்வு விகிதம்
இ) ஆதாய விகிதம் ஈ) தியாக விகிதம்

17. கூட்டாளி விலகலின் போது பொதுகாப்பு மாற்றப்படுவது
அ) அனைத்து கூட்டாளியின் முதல் கணக்கிற்கு
ஆ) மறுமதிப்பீட்டுக் கணக்கிற்கு
இ) தொடரும் கூட்டாளியின் முதல் கணக்கிற்கு
ஈ) நினைவுக்குறிப்பு மறுமதிப்பீட்டு கணக்கிற்கு

18. விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத்தொகை உடனடியாக செலுத்தாத போது அது மாற்றப்படும் கணக்கு
அ) வங்கி க/கு ஆ) விலகும் கூட்டாளியின் முதல் க/கு
இ) விலகும் கூட்டாளியின் கடன் க/கு ஈ) பிற கூட்டாளியின் முதல் க/கு

19. பின்வரும் வாக்கியங்களில் சரியாக பொருந்தக்கூடியது
அ) சந்தா - வருவாயின வரவுகள்
ஆ) மதிப்பூதியம் - முதலினச் செலவுகள்
இ) சிறப்பு நிதி - வருவாயினச் செலவுகள்
ஈ) விளையாட்டு உபகரணம் வாங்கியது - முதலின வரவுகள்

20. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத இறுதியில் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
அ) 5.5 மாதங்கள் ஆ) 6 மாதங்கள் இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்

## பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) 7 x 2 = 14

21. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?
22. ஆயுள் உறுப்பினர் கட்டணம் - சிறு குறிப்பு தருக.
23. நிலை முதல் முறை என்றால் என்ன?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

24. பின்வரும் தகவல்களிலிருந்து 2018 டிசம்பர் 31-ம் நாளைய முதல் கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று முதல் | 1,00,000 |
| உரிமையாளர் தனது சொந்த பயனுக்காக சரக்கு எடுத்தது | 30,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 15,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 60,000 |

25. பின்வரும் விவரங்கள் சீர்காழி பாடகர்கள் சங்கத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ₹ |
|---|---|
| 1.4.2018 அன்று எழுதுபொருள் இருப்பு | 2,600 |
| அவ்வாண்டில் வாங்கிய எழுதுபொருள் | 6,500 |
| 31.3.2019 அன்று எழுதுபொருள் இருப்பு | 2,200 |

26. 2018 ஜனவரி 1 அன்று பேகம் மற்றும் பாத்திமா என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகள் முறையே ₹50,000 மற்றும் ₹40,000 இருப்பினைக் காட்டியது. 2018 அக்டோபர் 1 அன்று பேகம் கூடுதல் முதலாக ₹10,000 கொண்டு வந்தார் மற்றும் 2018 மே 1 அன்று பாத்திமா கொண்டுவந்த கூடுதல் முதல் ₹9,000. டிசம்பர் 31, 2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடவும்.

27. உயர் இலாபம் என்றால் என்ன?

28. விமல் மற்றும் ஆதி என்ற இரு கூட்டாளிகள் 2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். அவர்கள் ஜெயம் என்பவரை 1/4 பங்குக்கு கூட்டாளியாக சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

29. விவின், ஹரி மற்றும் ஜாய் என்ற கூட்டாளிகள் 3:2:1 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வருகின்றனர். 31.3.2017 அன்று ஹரி விலகினார். அவர் விலகிய நாளில் நிறுவனத்தின் ஏடுகளில் பொது காப்பு ₹60,000 காட்டியது. பொது காப்பு மாற்றுவதற்கான குறிப்பேட்டுப் பதிவைத் தரவும்.

30. ஒரு நிறுவனத்தின் கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பின்வருமாறு: 2015 - ₹15,000, 2016 - ₹17,000, 2017 - ₹6,000 (நட்டம்), 2018 - ₹14,000
4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

## பகுதி - இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21**

31. நிலை அறிக்கை மற்றும் இருப்புநிலைக்குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் (ஏதேனும் 3) தரவும்.

32. பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனையை காணவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,00,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,30,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| உள் திருப்பம் | 25,000 |
| 2019 மார்ச் 31 அன்று கடனாளிகள் | 1,20,000 |

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



33. பின்வரும் விவரங்கள் ஒரு சங்கத்தின் 2017 2018 ஆம் ஆண்டுக்குரிய இறுதி கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

| விவரம் | ₹ |
|---|---|
| 1.4.2017 அன்று பரிசு நிதி | 60,000 |
| 1.4.2017 அன்று பரிசு நிதிக்கான முதலீடு | 60,000 |
| பரிசு நிதி முதலீடு மீதான வட்டி பெற்றது | 6,000 |
| பரிசுகள் வழங்கியது | 8,000 |
| பரிசு நிதிக்காக நன்கொடை பெற்றது | 12,000 |

34. சேலம் விளையாட்டு மன்றத்தின் 2019 ஏப்ரல் 1 அன்று முதல் நிதியை கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| விளையாட்டு உபகரணங்கள் | 30,000 | பரிசு நிதி | 10,000 |
| கணிப்பொறி | 25,000 | பரிசு நிதி முதலீடுகள் | 10,000 |
| 2018-19 ல் சந்தா பெற வேண்டியது | 5,000 | கை ரொக்கம் | 7,000 |
| 2019-20 ல் முன்கூட்டி பெற்ற சந்தா | 8,000 | வங்கி ரொக்கம் | 21,000 |

35. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கங்கள் ஏதேனும் ஆறினைத் தரவும்.

36. மன்னன் மற்றும் இரமேஷ் எனும் கூட்டாளிகள் 3:1 எனும் விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2017, ஏப்ரல்-1 அன்று அவர்களுடைய முதல் மன்னன் ₹80,000, இரமேஷ் ₹60,000 மற்றும் அவர்கள் நடப்புக் கணக்குகள் முறையே ₹10,000 மற்றும் ₹5,000 என வரவிருப்பை காட்டியது. 2018 மார்ச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% கணக்கிடவும். மற்றும் அதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளை தரவும்.

37. கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் கூட்டு சராசரி இலாபத்தினை பயன்படுத்தி நற்பெயரின் மதிப்பை கணக்கிடவும்.

| ஆண்டு | இலாபம் (₹) | நிறைகள் |
|---|---|---|
| 2015 | 10,000 | 1 |
| 2016 | 12,000 | 2 |
| 2017 | 16,000 | 3 |
| 2018 | 18,000 | 4 |

38. கூட்டாளி சேர்ப்பின் போது மேற்கொள்ள வேண்டிய சரிகட்டுதல்கள் யாவை?

39. கவிதா, குமுதா மற்றும் லலிதா ஆகிய கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை முறையே 5:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018 டிசம்பர் 31 அன்று குமுதா நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் விலகும் நாளில் அவருடைய முதல் கணக்கு ₹2,00,000 வரவு இருப்பினைக் காட்டியது.

i) அவருடைய தொகை காசோலை மூலம் உடனடியாக செலுத்தப்பட்டால்

ii) அவருடைய தொகை உடனடியாக செலுத்தப்படவில்லையெனில்

i) ₹70,000 உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது

என்ற சூழ்நிலைகளுக்கான குறிப்பேட்டுப் பதிவுகளை தரவும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



40. அன்பு என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 12% கணக்கிடப்படுகிறது. 2018 டிசம்பர்-31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு :

| நாள் | ₹ |
|---|---|
| மார்ச் 1 | 6,000 |
| ஜூன் 1 | 4,000 |
| செப்டம்பர் 1 | 5,000 |
| டிசம்பர் 1 | 2,000 |

பெருக்கு தொகை முறையைப் பயன்படுத்தி எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35**

41. அ) ராஜு முறையான கணக்கேடுகளை பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு :

| விவரம் | 1.1.2018 ₹ | 31.12.2018 ₹ |
|---|---|---|
| கை ரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கி கடன் | 60,000 | 60,000 |
| செலுத்தற்குரிய மாற்று சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹50,000 மற்றும் அவர் வியாபாரத்தில் இருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ₹2,500 எடுத்துக் கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும். *(அல்லது)*

ஆ) தென்காசி திருவள்ளுவர் மன்றத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்துதல் கணக்கிலிருந்து 2019, மார்ச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செல்வினக் கணக்கை தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்துதல் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | சம்பளம் | 20,000 |
| கை ரொக்கம் | 14,000 | வாடகை | 24,000 |
| வட்டி பெற்றது | 5,000 | பயணச் செலவுகள் | 2,000 |
| சந்தா | 55,000 | அச்சு (ம) எழுதுபொருள் | 6,000 |
| உயில் கொடை | 48,000 | முதலீடுகள் செய்தது | 50,000 |
| நுழைவுக் கட்டணம் | 7,000 | விளையாட்டு உபகரணம் வாங்கியது | 33,000 |
| அறைகலன் விற்றது | 16,000 | இருப்பு கீ/இ | |
| (ஏட்டு மதிப்பு ₹17,000) | | கை ரொக்கம் | 10,000 |
| | 1,45,000 | | 1,45,000 |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



42. அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2017, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,50,000 |
| 2017, ஏப்ரல் 1 அன்று பெ.மா.சீட்டு | 40,000 |
| கடனாளிகளிடம் பெற்ற ரொக்கம் | 3,90,000 |
| பெ.மா.சீட்டு ரொக்கம் பெற்றது | 90,000 |
| பெ.மா.சீட்டு மறுக்கப்பட்டது | 10,000 |
| விற்பனைத் திருப்பம் | 40,000 |
| 2018, மார்ச் 31 அன்று பெ.மா.சீட்டு | 30,000 |
| 2018, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 1,30,000 |
| ரொக்க விற்பனை | 2,00,000 |

*(அல்லது)*

ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து உயர் இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயர் மதிப்பைக் கணக்கிடவும்.

i) பயன்படுத்தப்பட்ட முதல் : ₹1,20,000

ii) சாதாரண இலாப விகிதம் : 20%

iii) 5 ஆண்டுகளுக்குரிய நிகர இலாபம்
2014 ₹30,000, 2015 ₹32,000, 2016 ₹35,000, 2017 ₹35,000, 2018 ₹40,000

iv) கூட்டாளிகளுக்கான உழைப்பு ஊதியம் ₹2,000

43. அ) இராஜேஷ் மற்றும் இரமேஷ் எனும் கூட்டாளிகள் 3:2 என இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். இராமன் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்துக்கொண்டனர். அவர்களது புதிய இலாப விகிதம் 5:3:2. பின்வரும் மதிப்பீடுகள் செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

i) கட்டடத்தின் மதிப்பு ₹15,000 உயர்த்தப்பட்டது

ii) இயந்திரத்தின் மதிப்பு ₹4,000 குறைக்கப்பட்டது

iii) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹1,000 உருவாக்கப்பட்டது

*(அல்லது)*

ஆ) மயிலாடுதுறை மனமகிழ் மன்றத்தின் கீழ்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல் மற்றும் செலுத்துதல் கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு | 15,000 | சம்பளம் கொடுத்தது | 12,000 |
| தொடக்க வங்கி இருப்பு | 25,000 | மன்ற ஆண்டுவிழா செலவு | 15,000 |
| நன்கொடை பெற்றது | 48,000 | ஒளியூட்டுச் செலவுகள் | 16,500 |
| பழைய உபகரணம் விற்றது | 26,000 | பொழுதுபோக்கு செலவுகள் | 13,500 |
| சிற்றுண்டிச் செலவுகள் | 13,000 | மேசை வாங்கியது | 5,000 |
| மன்ற ஆண்டுவிழா வசூல் | 18,000 | நாடகக்காட்சி செலவுகள் | 3,000 |
| டென்னிஸ் மைதான கட்டுமான செலவுகள் | 7,000 | முதலீடு விற்றது | 12,000 |
| | | இறுதி ரொக்க இருப்பு | 12,000 |
| அறக்கொடை நாடகாட்சி வசூல் | 4,000 | | |
| வாடகை செலுத்தியது | 1,000 | | |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



44. அ) அமல் மற்றும் விமல் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 7:5 என்ற விகிதத்தில் இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2019, மார்ச் 31 அன்றைய அவர்களின் இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கட்டடம் | 80,000 |
| அமல் | 70,000 | | அறைகலன் | 20,000 |
| விமல் | 50,000 | 1,20,000 | சரக்கிருப்பு | 25,000 |
| பற்பல கடனீந்தோர் | | 30,000 | கடனாளிகள் | 30,000 |
| இலாப நட்ட க/கு | | 24,000 | வங்கி | 19,000 |
| | | **1,74,000** | | **1,74,000** |

1.4.2019-ல் நிர்மல் புதிய கூட்டாளியாக சேருகிறார். அவர் ₹30,000 முதலுடன் எதிர்கால இலாப பங்கில் 1/3 விகிதத்தில் பின்வரும் சரிக்கட்டுதலுடன் கூட்டாளியாகிறார்.

i) சரக்கிருப்பின் மதிப்பு ₹5,000 குறைக்கவேண்டும்

ii) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹3,000 உருவாக்கப்படவேண்டும்

iii) கட்டடம் ₹20,000 மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்

மறுமதிப்பீட்டுக் க/கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின்பான கூட்டாளியின் முதல் கணக்கு தயார் செய்யவும்.

*(அல்லது)*

ஆ) பின்வரும் தகவல்களிலிருந்து, மன்னன் மற்றும் சேவகன் எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் மாறுபடு முதலாக இருக்கும் போது தயாரிக்கவும்.

| விவரம் | மன்னன் ₹ | சேவகன் ₹ |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் (வ) | 2,00,000 | 1,75,000 |
| 2018 ஆம் ஆண்டின் எடுப்பு | 40,000 | 35,000 |
| எடுப்பு மீதான வட்டி | 1,000 | 500 |
| 2018-ம் ஆண்டின் இலாப பங்கு | 21,000 | 16,500 |
| முதல் மீது வட்டி | 12,000 | 10,500 |
| ஊதியம் | 18,000 | --- |
| கழிவு | --- | 2,500 |

45. அ) ரம்யா, சாரா மற்றும் தாரா என்ற கூட்டாளிகள் முறையே 5:3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2018 ஏப்ரல் 1 அன்று தாரா கூட்டாண்மையில் இருந்து விலகினார். பின்வரும் சரிகட்டுதல்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

i) வளாகத்தின் மதிப்பு ₹40,000 உயர்த்தவேண்டும்.

ii) சரக்கிருப்பு ₹3,000, இயந்திரம் ₹6,500 மதிப்பு குறைக்க வேண்டும்

iii) கொடுபடா செலவுகள் ₹500 ஒதுக்கு உருவாக்க வேண்டும்

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

*(அல்லது)*

ஆ) துரை மற்றும் வேலன் 2018, ஏப்ரல் 1 அன்று கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். துரை ₹25,000 மற்றும் வேலன் ₹30,000 முதலாக கொண்டு வந்தனர். ஒப்பந்தம் பின்வருவனவற்றை கொண்டுள்ளது.

i) துரை மற்றும் வேலன் இலாப நட்டங்களை 2:3 என்ற விகிதத்தில் பகிரவேண்டும்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



ii) கூட்டாளிகளுக்கு முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% தர வேண்டும்
iii) எடுப்பு மீதான வட்டி : துரை ₹300 மற்றும் வேலன் ₹450
iv) துரைக்கு ஊதியம் ஆண்டுக்கு ₹5,000 வழங்கப்படவேண்டும்
v) வேலனுக்கு தரப்பட வேண்டிய கழிவு ₹2,000

அவ்வாண்டில் வட்டி, ஊதியம் மற்றும் கழிவு போன்றவற்றை சரிகட்டுவதற்கு முன் நிறுவனம் ஈட்டிய இலாபம் ₹20,000. இலாப நட்ட பகிர்வு கணக்கு தயாரிக்கவும்.

46. அ) மணி, ரமா மற்றும் தேவன் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள். தங்கள் இலாப நட்டங்களை முறையே 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2019, மார்ச் 31-ம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் : | | | கட்டடம் | 80,000 |
| மணி | 50,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| ரமா | 50,000 | | அறைகலன் | 70,000 |
| தேவன் | 50,000 | 1,50,000 | கடனாளிகள் | 20,000 |
| கடனீந்தோர் | | 20,000 | கை ரொக்கம் | 10,000 |
| இலாப நட்ட க/கு | | 30,000 | | |
| | | **2,00,000** | | **2,00,000** |

பின்வரும் சரிகட்டுதலுக்குட்பட்டு மணி 31.3.2019 அன்று கூட்டாண்மையில் இருந்து விலகுகிறார்.

i) சரக்கிருப்பில் ₹5,000 மதிப்பு குறைக்க வேண்டும்
ii) வாரா ஐயக்கடனுக்கு ₹1,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்
iii) கட்டடத்தின் மதிப்பு ₹16,000 அதிகரிக்க வேண்டும்
iv) மணிக்கு செலுத்த வேண்டிய தொகையை உடனடியாக செலுத்தப்படவில்லை

மறுமதிப்பீட்டு கணக்கு மற்றும் கூட்டாளி விலகலுக்கு பின் உள்ள முதல் கணக்கினைத் தயாரிக்கவும்

*(அல்லது)*

ஆ) ஸ்ரீதேவி நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 4கு ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பு கணக்கிடவும்.

i) டிசம்பர் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018-ன் இலாபங்கள் முறையே ₹1,75,000, ₹1,50,000 மற்றும் ₹2,00,000
ii) 2016ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹45,000 சேர்ந்துள்ளது
iii) 2017 ஆம் ஆண்டின் இறுதி சரக்கிருப்பு ₹30,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது

47. அ) இரட்டை பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

*(அல்லது)*

ஆ) பெறுதல்கள் மற்றும் செலுத்துதல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகள் தரவும்.

*******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com